<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு  எண். 185/2022

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ம் நாள் இன்று இந்த  வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : செல்வராஜ்

தந்தை பெயர் : தம்பிக் கவுண்டர்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும்.  அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த  24-01-2002ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். (வா.சா.ஆ.1 ஆவணத்தின் கடைசி பக்கத்தில் ஒயிட்னர் வைக்கப்பட்டுள்ளது. கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் ஒயிட்னரானது வழக்கு தாக்கல் செய்த போதே, வாதிகளால் வைக்கப்பட்டதாக முன்மொழிந்து, பதிவு செய்யப்பட்டது) கடந்த 05-03-2021ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.2** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-T.Praveenkumar
முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.